கிருஷ்ண துவைபாயன வியாச முனிவரின் பத்ம புராணத்தில் - நாரத முனிவருடனும் சௌனகரிஷியுடனும் சம்பாஷித்தபொழுது சத்ய விரத முனிவர் கூறுவது.

# ஸ்ரீ தாமோதர அஷ்டகம்

*1. நாமாமீஷ்வரம் சச்சிதானந்தரூபம்*
*லசத்குண்டலம் கோகுலே ப்ராஜமானம்*
*யசோதா பி யோலுஹலாத் தாவமானம்*
*பராம்ருஷ்டம் அத்யந்ததோ துருத்யகோப்யா*

*2. ருதந்தம் முகுர் நேத்ர யுக்மம் மிருஜந்தம்*
*கராம்போஜ யுக்மேன சாதங்க நேத்ரம்*
*முஹு: ஸ்வாச கம்ப திரிரேகாங்க கண்ட*
*ஸ்திதக்ரைவம் தாமோதரம் பக்தி பதத்தம்*

*3. ஈதிருக் ஸ்வ லீலாபிர் ஆனந்த குண்டே*
*ஸ்வ கோசம் நிமஜ்ஜந்தம் ஆக்யாபயந்தம்*
*ததீ யேசிதக்ஞேசு பக்தைர் ஜிதத்வம்*
*புன: பிரேமதஸ் தம் சதாவிருத்தி வந்தே*

*4. வரம் தேவ மோக்ஷம் ந மோக்ஷாவதிம்வா*
*ந சான்யம் வீருணேஹஅ் வரேசாத் அபீஹ*
*இதம் தே வபுர் நாத கோபால பாலம்*
*சதாமே மனஸ்யாவிராஷ்தாம் கிம் அன்யை*

*5. இதம் தே முகாம்போஜனம் அத்யந்த நீலை:*
*விருதம் குண்டலை: ஸ்னிக்த ரக்தைஸ்ச கோப்யா*
*முஹுஸ் சும்பிதம் பிம்ப ரக்தாதரம் மே*
*மனஸ்யாவிராஸ்தாம் அலம் லக்சலாபை:*

*6. நமோ தேவ தாமோதரானந்த விஸ்ணோ*
*பிரசீத பிரடீபா துக்க ஜாலப்தி மக்னம்*
*கிருபா திருஷ்டி விருஷ்ட்யாதி தீனம் பாதானு*
*கிருஹானேச மாம் அக்ஞாம் ஏத் யக்சி திருஷ்ய:*

*7. குவேராத்மஜௌ பத்த மூர்த்யைவ யத்வத்*
*த்வயா மோஜிதௌ பக்தி பாஜௌ கிருதௌச*
*ததா பிரேம பக்திம் ஸ்வகாம் மே பிரயச்ச*
*ந மோக்ஷே கிரஹோ மே ஸ்தி தாமோதரேஹ*

*8. நமஸ்தேஸ்து தாம்னே ஸ்புரத் தீப்தி தாம்னே*
*த்வதீயோதராயாத விஸ்வஸ்ய தாம்னே*
*நமோ ராதிகாயை த்வதீய பிரியாயை*
*நமோநந்த லீலாய தேவாய துப்யம*

1. நித்தியமானவரும், அறிவுமயமானவரும், ஆனந்த வடிவினருமாகிய சச்சிதானந்த வடிவத்தையுடைய பரமபுருஷர் தாமோதரரை நான் வணங்குகின்றேன். சுறாமீன் வடிவுள்ள காதிலுள்ள குண்டலங்கள் அங்குமிங்கும் அசைய கோகுலத்தில் ஒளியாக இருப்பவர். அன்னை யசோதை கடைந்து கொண்டிருந்த தயிர்ச்சட்டியை உடைத்துவிட்டு உறியில் இருந்த வெண்ணையைத் திருடிக்கொண்டு அன்னை யசோதைக்குப் பயந்து மர உரலில் இருந்து குதித்து ஓடினார். அன்னை அவரை விடவில்லை. விரைவாக ஓடினார். அவளிடம் பிடிபட்ட பரம்பொருள் தாமோதரருக்கு என் வணக்கங்கள்.

2. அன்னையின் கரங்களில் அடிக்கும் தடியைக் கண்ட தாமோதரர் தன் தாமரைக் கண்களை மீண்டும் கசக்கிக் கொண்டு அழுகிறார். அவருடைய கண்களில் அச்சம் நிறைந்திருந்தது. சங்கின் வரிகள் போன்று மூன்று புரிகளை உடைய அவருடைய கழுத்தில் இருந்த முத்தாரம், அவர் அழுது கொண்டு பெரு மூச்சுவிட்டதால் அசைந்து கொண்டிருந்தது. அவருடைய வயிற்றைச் சுற்றி கட்டப்பட்டது. உண்மையில் அவர் கயிற்றால் கட்டப்படவில்லை. அவரின் அன்னையின் தூய அன்பினால் தாய்ப்பாசத்தினால் கட்டப்பட்டார். அப்படிப்பட்ட அந்தத்தாமோதரருக்கு என் வணக்கங்கள்.

3. இதுபோன்ற பாலலீலைகளினால் கோகுலவாசிகளை ஆனந்த பரவசத்தில் மூழ்குவித்தார். அத்துடன், அவருடைய பரத்துவத்தையும், செல்விக்கைகளையும் அறிந்து அதில் ஈடுபட்டு அதே சிந்தையுள்ள தன் பக்தர்களுக்கு போலிக் கௌரவம், அச்சம் என்பவற்றிலிருந்து விடுபட்டு, முற்றாக ஈடுபாடு கொண்ட, பிரேமையுடன் கூடிய தூய பக்தியினால் தான் தன்னை வெல்ல முடியும் என்பதைக் காட்டினார். அப்படிப்பட்ட தாமோதரருக்கு அன்புடனும் ஆசையுடனும் மீண்டும் மீண்டும் நூற்றுக்கணக்கான வணக்கங்களைச் சமர்ப்பிக்கிறேன்.

4. ஓ என் பிரபு! நீர் எல்லாவித வரங்களையும் அளிக்க வல்லீர். ஆயினும் நான் எவ்வித வரத்தையும் உம்மிடம் கேட்கவில்லை. அருவ வடிவமான மோக்ஷத்தையோ, வைகுண்டவாசத்தையோ ஒன்பது விதமான பக்தி சேவைகளால் பெறப்படும் பலனையோ நான் விரும்பவில்லை. விருந்தாவனத்தில் உள்ள இந்த உமது பாலகோபால வடிவம் என்னுடைய இதயத்தில் எப்பொழுதும் காட்சியளிக்க வேண்டும். அது ஒன்றையே நான் கேட்கிறேன். இதை விட வேறு வரங்களினால் என்ன பயன்?

5. ஓ பிரபு! கருங்கூந்தலால் சூழப்பட்ட உமது அரவிந்த வதனம் அன்னை யசோதையால் அடிக்கடி முத்தமிடப்பட்டு சிவந்து காணப்படுகிறது. உமது உதடுகள் பிம்பப்பழம் போன்று சிவந்திருக்கிறது. இந்த அரவிந்த வதனம் என் இதயத்தில் என்றும் காட்சியளிக்கட்டும். இதை விட வேறு ஆயிரமாயிரம் வரங்களைப் பெற்றாலும் அவைகளால் எவ்வித பயனுமில்லை.

6. ஓ பரம்பொருளே! பகவானே! ஓ என் தாமோதரா! ஓ ஆனந்தா! ஓ விஷ்ணு! ஓ என் தலைவா! ஓ என் பிரபு! நான் உம்மை வணங்குகின்றேன். எனக்கு கருணை செய்யுங்கள். உங்கள் கருணை நிறைந்த பார்வையினால் இந்த அறியாமையில் மூழ்கி உலக பந்தமெனும் துக்க சாகரத்தில் விழுந்திருக்கும் முட்டாளை விடுவியுங்கள். காப்பாற்றுங்கள் என் கண்ணுக்குக் காட்சியளியுங்கள்.

7. ஓ பிரபு! தாமோதரா! மர உரலில் கட்டுண்ட குழந்தை வடிவத்தில் குபேரனின் பிள்ளைகளான மணிக்கிரீவன், நளக்குபேரன் ஆகிய இருவரையும் நாரதரின் சாபத்திலிருந்து விடுவித்து உமது பக்தர்களாக்கினீர். அவ்வாறே எனக்கு உமது பிரேம பக்தியை கொடுத்தருளுவீராக. இது ஒன்றையே நான் விரும்புகிறேன். வேறு எவ்வித மோக்ஷத்திற்கும் நான் ஆசைப்படவில்லை.

8. ஓ பிரபு! தாமோதரா! நான் முதலில் உமது உதரத்தை கட்டிய ஒளிநிறைந்த பிரகாசமான கயிற்றை வணங்குகிறேன். பின் உமது உதரத்தை வணங்குகிறேன். உமது உதரமோ அண்டசராசரமனைத்தையும் அடக்கியுள்ளது. அடுத்ததாக உமக்கு மிக பிரியமான உமது அருமை ஸ்ரீமதி ராதா ராணியை வணங்குகின்றேன். இறுதியாக எண்ணற்ற லீலைகளைப் புரியும் பரமபுருஷரும் பரம் பொருளுமாகிய உம்மை வணங்குகிறேன்.